2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 4

## பயிற்சி 5

பெயர் ________________________________________


*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**



## செவ்வரத்தம் பூ

- செவ்வரத்தை, செடி இனத்தைச் சேர்ந்தது.
- இதன் பூ, இலை, வேர் போன்ற அனைத்தும் மருத்துவக் குணங்கள் கொண்டவை.
- செவ்வரத்தம்பூ வயிற்றுப்புண், வாய்ப்புண் போன்ற நோய்களைக் குணப்படுத்தும்.
- இது சிவப்பு, மஞ்சள், வெள்ளை போன்ற பல நிறங்களில் காணப்படும்.
- செவ்வரத்தம் பூவில் மாலை கட்டுவர்.
- செவ்வரத்தை ஆசிய நாடுகளில் கூடுதலாகக் காணப்படும்.
- இதனைச் செம்பருத்திப் பூ என்றும் அழைப்பர்.
- இது மலேசியா நாட்டின் தேசிய மலராகும்.

2. **வாசித்தல்**

செண்பகம் முல்லை நிலத்திற்குரிய பறவையாகும். இது அமைதியான பறவை. இது கறுப்பு நிற உடலும் காவிநிறச் செட்டையும் உடையது. செண்பகம் ஏனைய பறவைகளைவிட வேறுபட்ட ஒரு பண்பைக் கொண்டது. அதாவது பறவைகள் குளிர் காலத்தில் வெப்பமான இடங்களைத் தேடிச் செல்லும். ஆனால் செண்பகம் எந்தச் சூழலிலும் தான் வாழும் இடத்தை விட்டு வேறிடத்திற்குச் செல்வதில்லை. இது புழுபூச்சிகளையே பிடித்து உண்ணும். இப்பறவை யாருக்கும் எந்தத் தீங்கும் செய்வதில்லை. எந்தப் பறவைக்கும் இல்லாத தனிப் பெருமை தமிழரிடையே இப்பறவைக்கு உண்டு. செண்பகம் தமிழீழத்தின் தேசியப் பறவையாகும்.

3. **பின்வரும் சொற்களைத் தமிழில் எழுதுவோம்.**

- Bus ______________________________
- Holiday ______________________________
- Summer ______________________________
- Letter ______________________________
- Education ______________________________
- Future ______________________________
- Tour ______________________________
- Friend ______________________________
- Pain ______________________________
- Daily ______________________________
- Happiness ______________________________
- Sadness ______________________________
- Celebration ______________________________
- Drama ______________________________
- Glass ______________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**4. பொருத்தமாக இணைப்போம்.**

| | |
|---|---|
| .நாளை | குரைக்கும் |
| சிறுவர்கள் | செல்வான் |
| நடனம் | விளையாடுகின்றனர் |
| நாய் | பெய்தது |
| மழை | ஆடினாள் |

**5. மாறியிருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுவோம்**

- பெய்தது / நேற்று / கடும் / மழை

________________________________________

- நல்ல / வாணியும் / நண்பிகள் / மாலதியும்

________________________________________

- வரும் / ஐப்பசி / தீபாவளி / மாதத்தில்

________________________________________

- நீச்சல் / நேற்று / வகுப்புக்குச் / நான் / சென்றேன்

________________________________________

- திருக்குறள் / கூறுகிறது / பற்றி / நட்பைப்

________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

6. **பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

- முத்தமிழ் எனப்படுபவை யாவை?

- வைகறை என்றால் என்ன?

- தமிழ்மொழியில் உள்ள முதல் எழுத்துகள் எத்தனை?

- 'நட்பு' என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**7. பொருத்தமான முடிக்கும் சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- நாள்தோறும் பள்ளிக்குச் ________________________________.
- மாமா கனடாவிலிருந்து நாளை ________________________________.
- பறவைகள் வானத்தில் ________________________________.
- தீபாவளியன்று கோயிலுக்குப் ________________________________.
- நான் நண்பியுடன் ________________________________.

**8. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஆங்கிலத்தில் மாற்றி எழுதவும்.**

கை - ________________________

கவலை - ________________________

மீட்டல் - ________________________

நட்பு - ________________________

மணம் - ________________________

காடு - ________________________

கரடி - ________________________

தரை - ________________________

ஒலி - ________________________

மரம் - ________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**9. படத்தைப் பார்த்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதவும்**

